கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.198/2022**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 11.11.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 11.11.2025 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | அஞ்சலை அம்மாள் | வயது | 90 |
| கணவர் பெயர் | கலியபெருமாள் | கிராமம் | நற்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை…**

1. வழக்கு சொத்தனாது எனது மாமனாரும் தம்பி காசாம்பும் கூட்டாக கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். எனது மாமனார் முத்துகுமரன் கையெழுத்து போடக்கூடிய நபர் என்றால் சரிதான். ஆனால் நான் கூறும் உயிலிலான வா.சா.ஆ.1ல் கைரேகை தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் பெயர் கலியபெருமாள். கலியபெருமாளுக்கு நான் முதல் மனைவி என்றாலும் 2வது மனைவி ஏழைமுத்து என்றாலும் சரிதான். எனக்கு மூன்று மகள்கள் மற்றும் 2 மகன்கள் ஏழைமுத்துக்கும் 3 மகள்கள் மற்றும் 1 மகன். எனது மகனின் பெயர் மனோகரன் மற்றும் மணிமாறன். ஏழைமுத்துவின் மகனின் பெயர் மூவேந்தன்.

2. எனது உயிலில் எனக்கும் ஏழைமுத்துக்கும் ஆயுள் வரை அனுபவிக்கும் உரிமையும் எனது மகன் மனோகரன் மற்றும் எனக்கு பிறக்கும் ஆண் சந்ததிகளும் ஏழைமுத்துவிற்கும் பிறக்கும் ஆண் சந்ததிகளும் அடையவேண்டும் என்று நிபந்தனையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நானும் ஏழைமுத்துவோ, என்னுடைய மற்றொரு மகனான மணிமாறன், ஏழைமுத்துவின் மகனான மூவேந்தனோயோ வழக்கின் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசாம்புவின் வாரிசுகளும் வழக்கின் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசாம்புற்கும் எனது மாமனார் முத்துகுமரனுக்கும் பாகம் பிரியவில்லை என்றால் சரிதான். காசாம்புவின் மகன் பெயர் வீராசாமி. 31.07.1972 ல் ஆவண எண்.1104/72 மூலம் minor கலைச்செழியனுக்கு காசாம்பும் மற்றும் வீராசாமியும் விற்று விற்றார் என்றால்

எனக்கு தெரியாது. காசாம்பு விற்றததை தொடர்ந்து நானும் இடத்தை தேதி 16.08.1972 தேதியிட்ட ஆவண மூலம் ஆவண எண்.1661/72 விற்றேனா என்றால் சரியல்ல.

3. எனது கணவரும் மாமனாரும் ராங்கசாமி மகன் ரத்தினசாமியிடம் கடன் உறுதி பத்திரம் மூலம் ரூ.1400 யை கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த கடனை அடைக்காமலேயே முத்துகுமரன் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. அந்த கடனை அடைக்கும் பொருட்டு தான் நானும் என் கணவரும் ஒப்புக்கொண்டு கலைச்செழியனுக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் எனக்கு தெரியாது. கிரயம் வாங்கிய உடன் இரு பத்திரங்களின் மூலம் கலைச்செழியன் பெயருக்கு பட்டா எண்.269 வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதில் அவர் விவசாய மின் இணைப்பு எண்.33 வாங்கியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வளையமாதேவி கூட்டுறவு கடன் சங்கத்தில் கலைச்செழியன் கடன் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. கலைச்செழியனும் ராஜவன்னியனும் கூட்டாக பெருமாளுக்கு 22.04.1991 ல் ஆவண எண்.359/91 ல் கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பெருமாள் பெற்ற கிரயத்தை அனுசரித்து அவரின் பெயரில் பட்டா எண்.1305 வழங்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 06.09.2012 ல் பெருமாள் தனது மூத்த மகனான நித்யானந்தனுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.1063/2012 மூலம் செய்தது தெரியுமா என்றால் தெரியாது. அவர் ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் சிதம்பரம் கிளையில் ஆவண எண்.103/2015 மூலம் சொத்தை அடமானம் வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கடனை அடைக்கும் பொருட்டு தான் வழக்கு சொத்தும் மற்றும் இதர சொத்துகளை அன்று 06.07.2020 1ம் பிரதிவாதிக்கு பெருமாள், நித்யனாந்தம், மணிகண்டன் ஆகியோர் கூட்டாக கிரயம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதை அனுசரித்து 1ம் பிரதிவாதியான காமராஜக்கு பட்டா கொடுத்த விவரமும் தெரியாது. 07.10.2020 அன்று ஆவண எண் 1259/2020 மூலம் கனரா வங்கியில் கடன் பெற்ற விவரமும் தெரியாது.

5. அதனை தொடர்ந்து தனது பெயரில் காமராஜ் சொத்து வரி ரசீது, மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து முறை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகன் எந்த தேதியில் இருந்து வழக்கு சொத்தில் இருந்து வெளியேறினார் என்றால் சுமார் 40 வருடம் காலம் இருக்கும். உயிலை அனுசரித்து நானோ, எனது மற்றொரு மகனான மணிமாறனோ, ஏழைமுத்து மற்றும் அவரது மூவேந்தனோ இன்று வரை உரிமையை கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆயுள்காலம் அனுபவம் இருக்கும் பட்சத்தில் என்னையோ, ஏழைமுத்துவோயோ, மற்ற 2 மகன்களையோ

தரப்பினாராக சேர்க்காமலும், காலவரைத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தினாலும் வழக்கு நிலைக்கக்கதல்ல என்றால் சரியல்ல.

6. நான் கிரயம் கொடுத்து விட்டு என் மகனை கருதி வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் தராமல் இருந்தால் கலைச்செழியன் கிரயம் பெற்ற 1972 லியே வழக்கை தொடுத்துயிருப்பேன் என்றால் சரியல்ல. கிரயம் வாங்கிய கலைச்செழியன் அனுபவித்ததற்கு நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. கலைச்செழியன் கிரயம பெற்றதற்கு அவர் பெயரிலோ, பெருமாள் பெயரிலோ, காமராஜ் பெயரிலோ நான் வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் தனிப்பட்ட முறையில் நான் எப்படி வழக்கு தொடுப்பேன். உயிலின் பாதுகாவலராக காட்டப்பட்ட நானும், மேஜர் ஆகிய 3 வருட காலத்திற்குள் வாதியும் வழக்கு தொடுக்காத காரணத்தினால் காலதோஷத்தினால் உரிமை அற்று போகி விட்டது என்றால் சரியல்ல. காசாம்பும் முத்துகுமரனும் கிரயம் பெற்ற சொத்தை எனது மாமனார் தனிப்பட்ட முறையில் உயில் எழுதி வைக்க உரிமை இல்லை என்றால் உயில் எழுதி வைத்த சொத்தை அடுத்தவர்கள் வாங்கிவிட்டார்கள். ஆகையால் என் மகனுக்கும் எனக்கும் வழக்கு சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- E.Swetha
Additional District Munsif
Chidambaram